[திரு. மு. அப்பாவு] [1999 மே 18

கொண்டிருக்கின்றன. ஆனால் கொடுமுடியாறு திட்டம்தான் மிக மோசமான நிலையில் இருக்கிறது. 1-7-1976-ல் கொடுமுடியாறு திட்டத்திற்கு 166 இலட்ச ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 40 இலட்ச ரூபாய் செலவில் அலுவலகம், குடியிருப்புகள் எல்லாம் கட்டப்பட்டு, பின்னர் இந்த அணைக்கட்டுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. 1986 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் வந்து அந்தப் பணிகளை மீண்டும் ஆரம்பித்தார்கள். 1987-ல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த வரலாற்றை எல்லாம் பேசுவதற்கு அனுமதி கொடுக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் சொல்லி முடித்தாகிவிட்டது. நான் இதற்கு மேல் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் சொல்ல வேண்டிய கருத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்கார வேண்டும். உங்கள் கருத்துக்கு அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாக இருக்கின்ற கொடுமுடியாறு திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதை பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். ஜூன் மாத இறுதியில் வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, அவை உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவின் சார்பில் உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்மீது

1999 மே 18] [திரு. பரிதி இளம்வழுதி]

எழுப்பப்பெற்ற உரிமைமீறல் பிரச்சினை மீதான குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன். அறிக்கையை அச்சடித்து அளிக்க போதிய கால அவகாசம் இன்மையால் தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையின் நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அறிக்கை பின்னர் அச்சிடப்பட்டு பேரவை உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. செ. இராமலிங்கம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் 18-வது முதல் 24-வது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் 20 முதல் 24-வது வரையிலான அறிக்கைகளை அச்சடித்து அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், குழுவின் தலைவர் திரு. ஆ. நடராசன்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1998-99ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழு, தான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் செயல்பாடு பற்றிய 94-வது அறிக்கையைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கை, போதிய கால அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி பெருக்கி நகல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.